# தமிழச்சி தங்கபாண்டியன்

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

## தேசிய ஆயுஷ் திட்டத்தில் தமிழ்நாட்டின் செயல் திட்டம் பரிசீலிக்கப்பட்டதா ?

## திமுக எம்பி தமிழச்சி தங்கபாண்டியன் ஒன்றிய அரசுக்கு கேள்வி

புதுடெல்லி, பிப்.10

தேசிய ஆயுஷ் செயல் திட்டத்தில் (என்.ஏ.எம்.) தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் 2022-23 ஆம் ஆண்டுக்கான வருடாந்திர செயல்திட்டப் பணிகள் குறித்து ஒன்றிய அரசு பரிசீலனை செய்ததா ?

அவ்வாறு பரிசீலனை செய்திருந்தால் அதைப்பற்றிய விபரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கோரினார்.

**இது தொடர்பாக மக்களவையில் வியாழக்கிழமை அவர் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு:**

தேசிய ஆயுஷ் செயல் திட்டத்தின் கீழ் (ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஹோமியோபதி மருத்துவ முறைகளை உள்ளடக்கியது) தமிழகத்தில் நிறுவப்படும் மருத்துவமனைகள், சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்கள் ஆகியவற்றுக்கான திட்டப் பணிகளுக்கும் அது தொடர்பான பல்வேறு செலவினங்களுக்கும் ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்த நிதி விவரம் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் ஆயுஷ் மருந்து முறைகளை மேம்படுத்தவும் அதற்கான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் ஒன்றிய அரசு மேற்கொண்ட வலுவான நடவடிக்கைகள் பற்றிய விவரங்களையும் கடந்த ஐந்து ஆண்டுகளில் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விவரங்களையும் நடப்பாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நீதி விவரங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று தமிழச்சி தங்கபாண்டியன் கோரினார்.

**திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் ஆயுஷ் துறை இணை அமைச்சர் சர்பானந்த சோனோவால் அளித்த பதில் விவரம் வருமாறு:**

ஆயுஷ் துறை அமைச்சகத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் தேசிய ஆயுஷ் திட்ட (என்ஏம்) அமைப்பானது தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் சமர்ப்பித்த மாநில வருடாந்திர செயல் திட்டங்களுக்கு (எஸ்ஏஏபி) 2022-23 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியது. இந்த அனுமதி தேசிய ஆயுஷ் திட்ட வழிகாட்டுதலின்படி வழங்கப்பட்டதாகும்.

என்ஏஎம் திட்டத்தின் கீழ் எஸ்.ஏ.ஏ.பி மூலம் 2022-23 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசிடம் இருந்து வந்த உத்தேசத் திட்டத்திற்கு ஆயுஷ் அமைச்சகம் அனுமதி வழங்கியது. அத்துடன் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை மேற்கொள்வதற்காக என்ஏஎம் வழிகாட்டுதலின்படி நிதி ஒதுக்கீடும் செய்தது. ஆயுஷ் மருத்துவமனைகள் சுகாதார

மற்றும் நல்வாழ்வு மையங்கள் அமைக்கவும் அதற்கான நடைமுறைச் செலவுகளுக்கும் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு தேசிய ஆயுஷ் திட்டத்தின் மூலம் ஆயுஷ் முறை மருந்துகளை மேம்படுத்தவும் அதற்குத் தேவையான நிதி உதவி மற்றும் கட்டமைப்புத் திட்டங்களை மேம்படுத்தவும் அந்த மாநிலங்களின் இது தொடர்பான வருடாந்திர செயல் திட்டங்களை செயல்படுத்தவும் தேவையான உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

தேசிய திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. ஆயுஷ் சுகாதார மற்றும் நல்வாழ்வு மையங்களை அமைப்பது

2. ஆரம்ப சுகாதார நிலையங்கள் சமுதாய சுகாதார மையங்கள் மாவட்ட மருத்துவமனைகள் ஆகியவற்றில் ஆயுஷ் சிகிச்சை வசதியை அமைக்க இடம் தேர்வு செய்வது

3. தற்போதுள்ள ஆயுஷ் மருத்துவமனைகளின் தரத்தை மேம்படுத்துவது.

4. தற்போதுள்ள அரசு, ஊராட்சி மற்றும் அரசு உதவி பெறும் ஆயுஷ் மருத்துவ சிகிச்சை மையங்களை நவீன மயப்படுத்துவது.

5. தற்போது வாடகை கட்டடங்களில் அல்லது பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வரும் ஆயுஷ் மருத்துவமனைகளை அகற்றி அங்கு புதிய கட்டடங்களைக் கட்ட ஏற்பாடு செய்வது. ஆயுஷ்

மருத்துவமனைகள் இல்லாத இடங்களில் புதிய ஆயுஷ் மருத்துவமனைகளை அமைப்பது

6. பத்து நோயாளிகள், முப்பது நோயாளிகள், ஐம்பது நோயாளிகள் என்ற அளவில் படுக்கைகள் இடம்பெறும் அளவில் புதிய ஆயுஷ் மருத்துவமனைகளை அமைப்பது

7. அரசு ஆயுஷ் மருத்துவமனைகள் அரசு ஆயுஷ் மருந்தகங்கள் அரசு அல்லது அரசு உதவி பெறும் ஆயுஷ் மருத்துவமனைகளுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகளை விநியோகிப்பது மற்றும் ஆயுஷ் மருத்துவமனை மருத்துவர் பயிற்சி நிறுவனங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவது

8.ஆயுஷ் தொடர்பான தகவல் பரிமாற்றங்களில் தேவையான மாற்றம் செய்வது

9. மாநில மற்றும் மாவட்ட அளவில் ஆயுஷ் நடமாடும் சிகிச்சை மையங்களுக்கு ஆதரவளிப்பது

10. ஆயுஷ் மாதிரி கிராமம் அமைப்பது

11. அரசுத் துறைகள் மூலம் புதிய ஆயுஷ் மருத்துவக் கல்லூரிகளை அமைப்பது. அரசுத் துறையின் மூலம் போதுமான அளவில் ஆயுஷ் பயிற்சி மையங்கள் இல்லாத இடங்களில் புதிய ஆயுஷ் மருத்துவக் கல்லூரிகளை அமைப்பது

12. ஆயுஷ் பட்டதாரி கல்வி நிறுவனங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது

13. ஆயுஷ் முதுநிலை பட்டதாரி கல்வி நிறுவனங்கள், மருந்து விற்பனையகங்கள், பாரா மெடிக்கல் வகுப்பு கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தித் தருவது

தேசிய ஆயுஷ் மிஷன் (என்ஏஎம்) மூலம் தமிழ்நாடு அரசின் வருடாந்திர செயல் திட்டங்களுக்காக ஒன்றிய அரசும் மாநில அரசும் அனுமதித்த தொகை ரூ.11,701.623 லட்சம் ஆகும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்ட தொகை (லட்சங்களில்) விவரம்:

2017-18 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.4648.453 லட்சம்

2018-19 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட/ அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ. 3877.175 லட்சம்

2019-20 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட/ அனுமதி வழங்கப்பட்ட தொகை 3323.188 லட்சம்

2020-21 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட/ அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.1027.633 லட்சம்

2021-22 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட/ அனுமதி வழங்கப்பட்ட தொகை3913.780 லட்சம்

******